தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

# தொழிற்பயிற்சி சேர்க்கை 2019

## தொகுப்பேடு

*மாவட்ட கலந்தாய்வு மூலம்*

*அரசு மற்றும் தனியார்*

*தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து*

**பயிற்சி பெற**

**திறனை மேம்படுத்த**

**வேலைவாய்ப்பு பெற**

**உலகை இயக்க**



*தொழிற்பயிற்சி சேர்க்கைக்கான தகவல்களும் குறிப்புகளும்*

www.skilltraining.tn.gov.in

# தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர்க்கை - 2019


| வரிசை எண் | விளக்கம் | பக்க எண் |
|---|---|---|
| 1 | பொது அறிவுரைகள் | 2 |
| 2 | பயிற்சி காலம் | 2 |
| 3 | இரட்டைப் பயிற்சி முறை (Dual Training) | 2 |
| 4 | கல்வித்தகுதி | 3 |
| 5 | வயது வரம்பு | 4 |
| 6 | இட ஒதுக்கீடு | 4 |
| 7 | சிறப்பு இனத்தவருக்கான ஒதுக்கீடு | 4 |
| 8 | முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர் | 4 |
| 9 | உடல் தகுதி | 5 |
| 10 | மாவட்ட கலந்தாய்வு | 5 |
| 11 | விண்ணப்பிக்கும் முறை | 6 |
| 12 | விண்ணப்பக் கட்டணம் | 6 |
| 13 | மாவட்ட கலந்தாய்வு சேர்க்கை முறை | 7 |
| 14 | தரவரிசையில் சமநிலை மதிப்பெண் | 8 |
| 15 | சான்றிதழ் சரிபார்ப்பு | 8 |
| 16 | பயிற்சிக் கட்டண விவரம் | 8 |
| 17 | விடுதி வசதி | 8 |
| 18 | சலுகைகள் | 9 |
| 19 | முக்கிய அறிவுரைகள் | 10 |
| 20 | SCVT தொழிற்பயிற்சி நிலையங்கள் | 10 |
| 21 | மாவட்ட கலந்தாய்வு நடைபெறும் இடங்கள் | 10 |
| 22 | அடிப்படை பயிற்சி மையங்கள் (BTC) மற்றும் தொழிற்பிரிவுகள் | 11 |
| 23 | மாவட்ட வாரியாக அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் | **ITI Details** |

# தொழிற் பயிற்சி நிலையங்களில் சேர்க்கை - 2019

## பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் பயிற்சி பெற தொழிற்பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கை

## தகவல்கள் மற்றும் அறிவுரைகள்

### 1. பொதுஅறிவுரைகள்/ General Information

தமிழ் நாட்டில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள், சுயநிதி தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அடிப்படை பயிற்சி மையங்களில் நடத்தப்படும் பொறியியல் மற்றும் பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளில் மாணவர் சேர்க்கை **மாவட்ட கலந்தாய்வு மூலம்** மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்த விளக்கக் குறிப்பேட்டில் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர விரும்பும் மாணவர்களுக்கான பொது தகவல் மற்றும் சேர்க்கை தொடர்பான விவரங்கள் தரப்பட்டுள்ளன. மாணவர்கள் சேர்க்கை தொடர்பான விவரங்களை கவனத்துடன் படித்து தெரிந்து கொள்ளவும்.

- தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர்ந்து பயிற்சி பெற்றிட விருப்பம் உள்ளோர் விண்ணப்பத்தினை இணையதளம் வாயிலாக மட்டுமே சமர்ப்பிக்க வேண்டும்.
- பெறப்படும் விண்ணப்பங்களின் அடிப்படையில் அரசு விதிகளுக்குட்பட்டு மாவட்ட கலந்தாய்வு வாயிலாக சேர்க்கை நடைபெறும்.
- மாவட்ட கலந்தாய்வு சேர்க்கையானது ஒவ்வொரு மாவட்டத்திலும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் (Nodal ITI) மட்டுமே வைத்து நடைபெறும்.
- மாவட்ட கலந்தாய்வு மூலம் நடைபெறும் பயிற்சியாளர்கள் சேர்க்கைக்கு ஒரு மாவட்டத்திற்கு ஒரு விண்ணப்பம் மட்டுமே இணையதளம் வாயிலாக சமர்ப்பித்தால் போதுமானது.
- வெவ்வேறு மாவட்டங்களில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர விரும்பும் மாணவர்கள் அந்தந்த மாவட்டங்களுக்கு தனித்தனியே விண்ணப்பங்கள் இணையதளத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

### 2. பயிற்சி காலம்:

அரசு தொழிற்பயிற்சி நிலையங்களில் பல்வேறு தொாழிற்பிரிவுகளில் ஒரு வருடம் மற்றும் இரண்டு வருட கால பயிற்சிகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆண்டின் முடிவிலும் அகில இந்திய தொழிற் தேர்வு நடைபெறும்.

தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்றுவிக்கப்படும் தொழிற்பிரிவுகள் விவரம், பயிற்சிக்கால அளவு, சேர்க்கைக்கான கல்வித்தகுதி ஆகிய விவரங்கள் view ITI details–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. இத்தொழிற்பிரிவுகளில் வழங்கப்படும் பயிற்சிகள் மத்திய அரசின் தேசிய தொழிற்பயிற்சிக் குழுமத்தின் (NCVT) அங்கீகாரத்தின் கீழ் நடத்தப்படுகின்றன. பயிற்சி ஒவ்வொரு வருடமும் ஜீலை மாதம் துவங்கும். பயிற்சி முடிவில் அனைத்து ஆண்டு தேர்வுகளிலும் தேர்ச்சி பெறுபவர்களுக்கு தேசிய தொழிற் சான்றிதழ்கள் **(NTC)** வழங்கப்படும்.

### 3. இரட்டைப்பயிற்சி முறை:

தமிழகத்தில் உள்ள சில அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் இப்பயிற்சி முறையானது நடத்தப்பட்டு வருகிறது. இப்பயிற்சி முறையில் கருத்தியல் மற்றும் அடிப்படை செய்முறை பயிற்சி வகுப்புகள் தொழிற்பயிற்சி நிலையங்களிலும் செய்முறை பயிற்சி வகுப்புகள் தொழிற்பயிற்சி நிலையங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம்செய்துள்ள தொழில் நிறுவனங்களிலும் நடைபெறும்.

இப்பயிற்சி முறையில் சேரும் மாணவர்களுக்கு நிறுவனங்களில் பயிற்சி பெறும் காலத்திற்கு ஊக்கத்தொகை தொழில் நிறுவனங்களால் வழங்கப்படும். இப்பயிற்சி முறையிலும் தேர்வு ஆண்டுக்கு ஒரு முறை நடத்தப்படும்.

இப்பயிற்சி முறை வழங்கப்படும் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பிரிவுகள் விவரங்கள் **view ITI details**-ல் தரப்பட்டுள்ளது.

### 4. கல்வித்தகுதி:

தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்றுவிக்கப்படும் தொழிற்பிரிவுகளுக்கான கல்வித்தகுதியாக எட்டாம் வகுப்பு தேர்ச்சி, பத்தாம் வகுப்பு தேர்ச்சி மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. (தொழிற்பிரிவுகள் விபரம் ITI details–ல் தரப்பட்டுள்ளது).

1. 8-ம் வகுப்பு தேர்ச்சி – தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்றுவிக்கப்படும் தொழிற்பிரிவுகளில் குறிப்பிட்ட சில தொழிற்பிரிவுகளுக்கு மட்டும் 8-ம் வகுப்பு தேர்ச்சி கல்வித் தகுதியாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பதாரர்கள் 8-ஆம் வகுப்பு வரை *பள்ளிகளில் முறையாகப் பயின்று (Regular) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.* **8-ம் வகுப்பு தேர்ச்சி கல்வித் தகுதியென நிர்ணயம் செய்யப்பட்ட தொழிற்பிரிவுகளில் சேர்க்கைக்கு 8-ம் வகுப்பு மதிப்பெண்கள் மட்டுமே கணக்கில் கொள்ளப்படும். இத்தகைய தொழிற்பிரிவுகளுக்கு 10–ம் வகுப்பு மதிப்பெண்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.** எனவே 8-ம் வகுப்பு தொழிற்பிரிவுகளுக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் 8-ம் வகுப்பு மதிப்பெண் பட்டியலை சம்மந்தப்பட்ட பள்ளியிலிருந்து பெற்று கண்டிப்பாக கலந்தாய்வின் போது சமர்ப்பிக்க வேண்டும். விண்ணப்பத்தில் 8-ஆம் வகுப்பு மதிப்பெண்களைப் பதிவு செய்ய வேண்டும்.

2. 10-ம் வகுப்பு தேர்ச்சி என நிர்ணயம் செய்யப்பட்ட தொழிற்பிரிவுகளில் சேர்ந்திட எட்டாம் வகுப்பு வரை பள்ளிகளில் முறையாகப் பயின்று (Regular) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 10-ம் வகுப்பு தனித்தேர்வராக எழுதி தேர்ச்சி பெற்றிருப்பினும் சேர்க்கைக்கு அனுமதிக்கப்படுவர். எட்டாம் வகுப்பு வரை பள்ளிகளில் முறையாக பயின்று தேர்ச்சி பெறாதவர்கள் தொழிற்பயிற்சி நிலையங்களில் சேர இயலாது.

## 5.வயது வரம்பு:

| வ.எண் | பொருள் | வயது: |
|---|---|---|
| 1 | பகிரங்கப்போட்டி (OC) | 14 முதல் 40 வயது வரை |
| 2 | பிற்பட்ட வகுப்பினர் / மிகவும் பிற்பட்ட வகுப்பினர் /சீர்மரபினர் பழங்குடியினர் (BC/MBC/DNT) | 14 முதல் 40 வயது வரை |
| 3 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் /பழங்குடியினர்(SC/ST) | 14 முதல் 40 வயது வரை |
| 4 | முன்னாள் இராணுவத்தினர் | 14 முதல் 45 வயது வரை |
| 5 | மாற்றுத் திறனாளிகள் | 14 முதல் 40 வயது வரை |
| 6 | போரில் இறந்த இராணுவ வீரரின் மனைவி | குறைந்தபட்ச வயது 14 வயது உச்சவரம்பு - இல்லை |
| 7 | விதவை /கணவரால் கைவிடப்பட்டோர் | குறைந்தபட்ச வயது 14 வயது உச்சவரம்பு - இல்லை |
| 8 | மகளிர் | குறைந்தபட்ச வயது 14 வயது உச்சவரம்பு - இல்லை |

## 6. இட ஒதுக்கீடு :

| வ.எண் | பொருள் | இட ஒதுக்கீடு: |
|---|---|---|
| 1 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (SC) | 15.3 சதவீதம் |
| 2 | தாழ்த்தப்பட்ட வகுப்பினர் (அருந்ததியர்)(SCA) | 2.7 சதவீதம் |
| 3 | பழங்குடியினர் (ST) | 1 சதவீதம் |
| 4 | மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் /சீர்மரபினர் பழங்குடியினர் (MBC/DNT) | 20 சதவீதம் |
| 5 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (BC) | 26.5 சதவீதம் |
| 6 | பிற்படுத்தப்பட்ட முஸ்லீம் இனத்தவர்(BCM) | 3.5 சதவீதம் |
| 7 | பகிரங்க போட்டி | 31 சதவீதம் |

## 7. சிறப்பு இனத்தவருக்கான ஒதுக்கீடு :

| | |
|---|---|
| **முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர்** (ஒரு தொழிற்பயிற்சி நிலையத்திற்கு) | 5 இருக்கைகள் |
| **மாற்றுத் திறனாளிகள்** | 5 சதவீதம் |
| **மாநில அளவில் விளையாட்டு போட்டிகளில் முதன்மையாக வரும் பள்ளி மாணவ, மாணவியருக்கு** | 1 சதவீதம் |
| **தாய் தந்தை இழந்த மாணவருக்கு** | 2 சதவீதம் |
| **மகளிர்** | 30 சதவீதம் |

## 8. முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர்

முன்னாள் இராணுவத்தினரின் வாரிசுதாரர் முன்னாள் படை வீரர் நல இயக்கக உதவி இயக்குநரால் வழங்கப்பட்ட சான்றிதழை கலந்தாய்வின் போது சமர்ப்பித்தல் வேண்டும். ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் இவர்களுக்கு 5 இருக்கைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. மாணவர் பெற்றுள்ள மதிப்பெண் அடிப்படையில் தொழிற்பிரிவு ஒதுக்கப்படும்.

## 9. உடல் தகுதி:

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள் மருத்துவ சான்றிதழின் பேரில் சேர்க்கைக்கு அனுமதிக்கப்படுவர். மருத்துவ சான்றிதழின்படி உடல் தகுதியற்றோர்கள் சேர்க்கைக்கு அனுமதிக்கப்பட மாட்டாாகள்.

மாற்றுத் திறனாளிகள் ஊனத்தின் தன்மையைப் பொறுத்து மருத்துவரின் பரிந்துரையின் பேரில் உரிய தொழிற் பிரிவுகளில் சேர்க்கைக்கு பரிசீலிக்கப்படுவர். தொழிற்பயிற்சி நிலையத்தில் மருத்துவர் முன்னர் ஆஜராகி, மருத்துவர் அளிக்கும் சான்றிதழின்படி மட்டுமே இவர்களுக்கு தொழிற்பிரிவுகள் ஒதுக்கப்படும்.

மாற்றுத் திறனாளிகள் தங்களின் ஊனத்தன்மையை விளக்கும் வகையில் 125 X 75 மி.மீ. நிழற்படத்தையும், முடவியல் (Ortho) மருத்துவரின் சான்றிதழையும் பெற்று கலந்தாய்வின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

## 10. மாவட்ட கலந்தாய்வு:

ஒரு மாவட்டத்தில் உள்ள அனைத்து அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள், சுயநிதி தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் அரசு ஒதுக்கீட்டு இடங்கள் மற்றும் அடிப்படை பயிற்சி மையங்களில் சேர்க்கை அந்த மாவட்டத்தில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் (**Nodal ITI**) மட்டும் மாவட்ட கலந்தாய்வு முறையில் மேற்கொள்ளப்படும்.

தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களை பொறுத்த வரையில் கலந்தாய்வுக்கு விருப்பம் தெரிவித்துள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில், துறை சார்பில் ஆய்வு செய்யப்பட்டு ஆய்வுகளில் பரிந்துரைக்கப்படும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மட்டுமே கலந்தாய்வுக்கு அனுமதிக்கப்படும். தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களால் அரசுக்கு ஒப்புவிக்கப்படும் 50% அரசு ஒதுக்கீட்டு இடங்கள் மாவட்ட கலந்தாய்வின் மூலம் நிரப்பப்படும்.

ஒரு மாவட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு தொழிற்பயிற்சி நிலையம் தவிர வேறு எந்த அரசுதொழிற்பயிற்சி நிலையத்திலும் சேர்க்கை நடைபெறாது. எனவே, மாணவர்கள் சேர்க்கைக்காக அந்த மாவட்டத்தில் உள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் மட்டுமே கலந்தாய்வில் கலந்து கொள்ள வேண்டும்.

கலந்தாய்வுக்கான (Counselling Date/Time) நிகழ்ச்சி நிரல் www.skilltraining.tn.gov.in என்ற இணைய தளத்தில் மே மாத இறுதியில் வெளியிடப்படும்.

மாணவர்கள் இதனடிப்படையில் மாவட்டக் கலந்தாய்வில் கலந்துகொண்டு மதிப்பெண் மற்றும் இன சுழற்சி அடிப்படையில் தயாரிக்கப்படும் தரவரிசையின்படி அந்த மாவட்டத்தில் சேர விரும்பும் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பிரிவினை தேர்வு செய்து கொள்ளலாம்.

இணையதளத்தில் தரப்பட்டுள்ள தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களின் பட்டியல் தகவலுக்காக மட்டுமே தரப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் கலந்தாய்வில் கலந்து கொள்ளும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மண்டலப் பயிற்சி இணை இயக்குநர்களால் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு பரிந்துரைக்கப்பட்டு ஆணையரின் ஒப்புதலுக்குப் பிறகே மாவட்டக் கலந்தாய்வில் சேர்க்கப்படும். இதில் தரப்பட்டுள்ள தகவல்களை வைத்து தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் கலந்தாய்வில் கலந்து கொள்ள உரிமை கோர இயலாது.

11. **விண்ணப்பிக்கும் முறை:**

**அ.** மாவட்ட கலந்தாய்வு மூலம் நடைபெறும் சேர்க்கைக்கு விண்ணப்பிக்கும் மாணவர் www.skilltraining.tn.gov.in என்ற இணையதள முகவரியின் மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

**ஆ.** இணையதளத்தில் விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சரிபார்த்த பின் சமர்ப்பித்து ஒப்புகை பெறலாம். அதனை பிரிண்ட் செய்து கொள்ளலாம்.

**இ.** ஒரு மாவட்டத்தில் உள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்கள், தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அடிப்படை பயிற்சி மையங்களில் மாவட்ட கலந்தாய்வு மூலம் சேர்க்கை பெற ஒரு மாவட்டத்திற்கு ஒரு விண்ணப்பம் மட்டும் சமர்ப்பித்தால் போதுமானது.

**ஈ.** இணையதள விண்ணப்பத்தில், சேர்க்கை தேவைப்படும் மாவட்டத்தை தெரிவு செய்து, சமர்ப்பித்திட வேண்டும். விண்ணப்பம் எந்த மாவட்டத்தில் பெறப்படுகிறதோ அந்த மாவட்ட கலந்தாய்விற்கு மட்டுமே பரிசீலிக்கப்படும்.

**உ.** மாணவர்கள் சேர விரும்பும் ஒரே மாவட்டத்தில் உள்ள இரண்டு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் இரண்டு தொழிற்ப்பிரிவுகள் ஆகியவற்றையும் இணையதள விண்ணப்பத்தில் பதிவு செய்யலாம்.

**ஊ.** ஒரு மாணவர் பல மாவட்டங்களில் விண்ணப்பிக்கலாம். ஆனால் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனி இணையதள விண்ணப்பம் சமர்ப்பித்தல் வேண்டும்.

**விண்ணப்பிக்க கடைசி தேதி. 31.05.2019.**

12. **விண்ணப்பக் கட்டணம்:**

**மாணவர்கள் இணையதள விண்ணப்பக் கட்டணமாக ஒரு விண்ணப்பத்திற்கு ரூ.50-ஐ (ரூபாய் ஐம்பது மட்டும்) வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் சேர்க்கை வங்கி கணக்கான இந்தியன் வங்கி (Indian Bank) சேமிப்பு கணக்கு எண்: 6526577760, Name: AAO and Deputy Director (Admission and Trade Test), Branch: Saidapet, Chennai, IFSC code - IDIB000S004 - ல் செலுத்தி, செலுத்துச் சீட்டின் நகலை (Nodal ITI Copy) கலந்தாய்வின் போது வருகையைப் பதிவு செய்யும் அலுவலரிடம் தவறாமல் சமர்ப்பிக்க வேண்டும்.**



Department of Employment and Training
ITI Admission through District Counselling-2019

| Challan for Payment into Indian Bank, (Saidpet Branch, Chennai) | |
|---|---|
| Indian Bank A/c No. 6526577760 | |
| Banker's copy | |
| Date of payment | |
| Name of the Candidate (in Capital letters): | |
| Online Application Register No. | |
| Counselling District | |
| Type of Fee | Amount in |
| ITI Admission through District Counselling Application Fee | Rs. 50/- |
| Bank Charges : | Nil |

Department of Employment and Training
ITI Admission through District Counselling-2019

| Challan for Payment into Indian Bank, (Saidpet Branch, Chennai) | |
|---|---|
| Indian Bank A/c No. 6526577760 | |
| Nodal ITI copy to be submitted with the application form | |
| Date of payment | |
| Name of the Candidate (in Capital letters): | |
| Online Application Register No. | |
| Counselling District | |
| Type of Fee | Amount in |
| ITI Admission through District Counselling Application Fee | Rs. 50/- |
| Bank Charges : | Nil |

Department of Employment and Training
ITI Admission through District Counselling-2019

| Challan for Payment into Indian Bank, (Saidpet Branch, Chennai) | |
|---|---|
| Indian Bank A/c No. 6526577760 | |
| Candidate's copy | |
| Date of payment | |
| Name of the Candidate (in Capital letters): | |
| Online Application Register No. | |
| Counselling District | |
| Type of Fee | Amount in |
| ITI Admission through District Counselling Application Fee | Rs. 50/- |
| Bank Charges : | Nil |

இணையதள விண்ணப்ப பதிவின்போது விண்ணப்பக்கட்டணம் செலுத்த தவறின் விண்ணப்பத்திற்கான கட்டணத்தொகை ரூ.50/- (ரொக்கமாக அல்லது வங்கி வரைவோலையாக) கலந்தாய்வு நடைபெறும் நாளன்று கலந்தாய்வு நடைபெறும் தொழிற்பயிற்சி நிலையத்தில் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளலாம்.

## 13. மாவட்ட கலந்தாய்வு சேர்க்கை முறை:

1. தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்றுவிக்கப்படும் தொழிற்பிரிவுகளில் சேர விரும்பும் மாணவர்கள் 8-ம் வகுப்பு / 10-ம் வகுப்பு தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்கள் அடிப்படையில் தரவரிசை நிர்ணயிக்கப்படும்.

2. சம்பந்தப்பட்ட மாவட்ட கலந்தாய்வில் கலந்து கொள்ள தேர்வு செய்யப்படும் மாணவர்களின் பெயர்ப்பட்டியல் ஒவ்வொரு மாவட்ட கலந்தாய்வு நடைபெறும் அரசு தொழிற் பயிற்சி நிலையத்திலும் தகவல் பலகையில் ஒட்டப்படும்.

3. கலந்தாய்வு நடைபெறும் தேதி, இடம், நேரம் ஆகிய விவரங்கள் இதே இணையதளத்தில் மே மாத இறுதியில் வெளியிடப்படும். மாணவர்கள் தங்களது Cell No. மற்றும் e-mail முகவரியை இணையதள விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். இது கலந்தாய்வு விபரம் சிரமமின்றி உடன் கிடைக்க ஏதுவாக அமையும்.

4. தர வரிசைப் பட்டியலின்படி மாணவர்கள், மாவட்டத்திலுள்ள கலந்தாய்வு நடைபெறும் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் தங்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நாள் மற்றும் நேரத்தில் கலந்தாய்வில் கலந்து கொள்ள வேண்டும்.

5. கலந்தாய்வுக்கு வரும்போது மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate), மதிப்பெண் பட்டியல் (Mark Sheets), சாதிச் சான்றிதழ் (Community Certificate), வண்ண நிழற்படம் (Colour Photo) - 5 எண்கள் மற்றும் சிறப்பு நிலை முன்னுரிமைச் சான்றிதழ் இருப்பின் (Special category Priority Certificate) அதனையும் தவறாமல் கொண்டு வர வேண்டும்.
6. கலந்தாய்வு தேதியன்று தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள இருக்கை நிலவரங்கள் கலந்தாய்வு நடைபெறும் அரங்குகளில் மின்னணு திரையில் ஒளிபரப்பப்படும். மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பிரிவினைத் தேர்ந்தெடுக்க இது உதவியாக இருக்கும்.
7. கலந்தாய்வுக்கு குறிப்பிட்ட தேதியில் மற்றும் நேரத்தில் வரத்தவறினால் தரவரிசையை இழக்க நேரிடும். கலந்தாய்வு தினத்தன்று தாமதமாக மாணவர் வருகை தந்தால் காலியாக உள்ள தொழிற்பயிற்சி நிலையத்தையும் தொழிற்பிரிவையுமே தேர்வு செய்ய இயலும். ***மாணவரது முந்தைய தரவரிசைப்படி உரிமை கோர இயலாது.***
8. கலந்தாய்வு தேதியில் விண்ணப்பித்த மாணவர்கள் வரத்தவறினால், கலந்தாய்வு நடைபெறும் மற்ற நாட்களில் கலந்தாய்வுக்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். இத்தகைய மாணவர்கள் தங்களது ஆரம்ப நிலை தரவரிசைப்படி இடம் தேர்வு செய்ய உரிமை கோர இயலாது.
9. தவிர்க்க இயலாத காரணத்தினால் கலந்தாய்வுக்கு நேரடியாக வர இயலாத நேர்வில் மாணவர் சார்பாக பெற்றோர் கலந்தாய்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர். பெற்றோர் இதற்கான ஒப்புதல் கடிதத்தை மாணவரிடமிருந்து பெற்று வர வேண்டும். வருகை தந்துள்ள பெற்றோர் தேர்வு செய்யும் தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பிரிவே இறுதியானது. இதற்கு மாணவர் ஒப்புதல் தந்ததாகக் கருதப்படும்.

10. கலந்தாய்வின்போது தேர்வு செய்த தொழிற்பயிற்சி நிலையம் மற்றும் தொழிற்பிரிவே இறுதியானது. அன்றைய தினமே, சேர்க்கை அனுமதி ஆணை வழங்கப்படும். இதன்படி மாணவர் சேர்க்கை பெறப்பட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் குறிப்பிட்ட நாளில் பயிற்சியில் சேர வேண்டும். குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சேராதவர்கள் பின்னர் சேர்க்கைக்கு அனுமதிக்கப்பட மாட்டார்கள். இந்த இடம் காலியிடமாக கருதப்பட்டு அடுத்த கலந்தாய்வின் போது வேறு தகுதியான நபருக்கு ஒதுக்கீடு செய்யப்படும்.

## 14. தரவரிசையில் சமநிலை மதிப்பெண்:

**ஒன்றுக்கு மேற்பட்ட மாணவர்கள்** தர வரிசையில் சமநிலை மதிப்பெண் பெற்றால் கீழ்கண்ட காரணங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்டு தரவரிசை நிர்ணயிக்கப்படும்.

i. கணித மதிப்பெண் கூடுதலாகப் பெற்றோர் முதலிடம் பெறுவார் (இருவரும் ஒரே மதிப்பெண் பெற்றிருப்பின் )

ii. அறிவியல் மதிப்பெண் கூடுதலாகப் பெற்றோர் முதலிடம் பெறுவார் (இருவரும் ஒரே மதிப்பெண் பெற்றிருப்பின் )

iii. மொத்த மதிப்பெண் கூடுதலாகப் பெற்றோர் முதலிடம் பெறுவார் (இருவரும் ஒரே மதிப்பெண் பெற்றிருப்பின் )

iv. பிறந்த தேதி (அதிக வயதுக்கு முன்னுரிமை)

## 15. சான்றிதழ் சரிபார்ப்பு:

மாணவர் சேர்க்கையின் போது சமர்ப்பிக்கப்படும் 8–ம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ்கள் சம்பந்தப்பட்ட கல்வி நிறுவனத்திற்கு அனுப்பி சரிபார்க்கப்படும்.

10-ம் வகுப்பு சான்றிதழ்கள் பள்ளிக் கல்வித்துறைக்கு அனுப்பி சரிபார்க்கப்படும்.

தவறான சான்றிதழ்கள் சமர்ப்பிக்கும் நேர்வில், சம்பந்தப்பட்ட மாணவரின் சேர்க்கை ரத்து செய்யப்படுவதோடு, சம்பந்தப்பட்ட மாணவரின் மீது உரிய குற்றவியல் (Criminal) நடவடிக்கை எடுக்கப்படும்.

## 16. பயிற்சிக் கட்டண விவரம்:

கீழ்கண்ட கட்டணங்களை மாணவர்கள் பயிற்சியில் சேரும்போது செலுத்த வேண்டும்.

| | | |
|---|---|---|
| 1 | பயிற்சிக்கட்டணம் (Tution Fee) | ஏதும் இல்லை |
| 2 | காப்புத் தொகை (Caution Deposit) | ரூ.100 (பயிற்சியின் முடிவில் திரும்ப வழங்கப்படும்) |
| 3 | விளையாட்டுப்போட்டிகள் தொடர்பான கட்டணம் (Sports Fee) | ரூ.10 |
| 4 | பதிவுக் கட்டணம் (Registration fee) | ரூ.25 |
| 5 | 10, 8-ஆம் வகுப்பு மதிப்பெண் சான்றிதழ் சரிபார்க்கும் கட்டணம் (Certificate verification fee) | ரூ.50 (தலா ஒரு சான்றிதழுக்கு) |

## 17. விடுதி வசதி:

குறிப்பிட்ட கீழ்காணும் அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் விடுதி வசதி உள்ளது. விடுதியில் உள்ள இட வசதியை பொறுத்து மாணவர்கள் தங்குவதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

1. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், வடசென்னை
2. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், வேலூர்
3. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், அம்பத்தூர்
4. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், செங்கல்பட்டு
5. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், திருவண்ணாமலை
6. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், சேலம்
7. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், மேட்டூர் அணை
8. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், தாராபுரம்
9. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், குன்னூர்
10. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், ஓசூர்
11. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், ஈரோடு
12. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், கடலூர்
13. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், நாகப்பட்டினம்
14. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், திருச்சி

15. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், அரியலூர்
16. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், மதுரை
17. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், பரமக்குடி
18. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், திண்டுக்கல்
19. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், திருநெல்வேலி
20. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், திருச்செந்தூர்
21. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், நாகர்கோவில்
22. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், விருதுநகர்
23. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், போடிநாயக்கனூர்
24. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், வேப்பலோடை
25. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், இராதாபுரம்
26. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், திருவையாறு
27. அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், அருப்புக்கோட்டை

| | | |
|---|---|---|
| 1 | விடுதி சேர்க்கைக் கட்டணம் | ரூ.01 |
| 2 | விடுதி காப்புத் தொகை | ரூ.25 |
| 3 | விடுதி வாடகை கட்டணம் (ஆண்டு ஒன்றுக்கு) | ரூ.200 |
| 4 | விடுதி பராமரிப்பு கட்டணம் (ஆண்டு ஒன்றுக்கு) | ரூ.10 |

இது தவிர பிற்பட்டோர் மற்றும் மிகவும் பிற்பட்டோர் நலத்துறை, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் உணவுடன் கூடிய விடுதி வசதிகள் பல இடங்களில் உள்ளன. இதில் குறிப்பிட்ட இடங்கள் அரசு தொழிற்பயிற்சி நிலைய மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. விடுதியில் உள்ள இடவசதியை பொறுத்து இவற்றில் தங்குவதற்கு பயிற்சியாளர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

## 18. மாணவர்களுக்கு பயிற்சி காலத்தில் வழங்கப்படும் சலுகைகள்

**(அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு உதவி பெறும் தனியார்தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெறும் மாணவர்களுக்கு மட்டும்)**

**அ)** அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் அரசு உதவி பெறும் தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு கீழ்கண்ட சலுகைகளை அரசு வழங்குகிறது.

| | |
|---|---|
| 1 | உதவித்தொகை ரூ.500/- மாதந்தோறும் (வருகை நாட்களுக்கு ஏற்ப) |
| 2 | விலையில்லா பேருந்து கட்டண சலுகை |
| 3 | விலையில்லா மிதிவண்டி |
| 4 | விலையில்லா மடிக்கணினி |
| 5 | விலையில்லா பாடப்புத்தகங்கள் மற்றும் வரைபடக் கருவிகள் |
| 6 | விலையில்லா சீருடை - ஒரு செட் |
| 7 | விலையில்லா காலணி - ஒரு செட் |

**ஆ)** தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் சேரும் மாணவர்களுக்கான பயிற்சி கட்டணத்தை கீழ்காணுமாறு அரசே செலுத்துகிறது.

1. நகரப்பகுதிகளில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.12,000/- வீதம் பயிற்சிக்கட்டணம் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு அரசு சார்பில் வழங்கப்படும்.
2. ஊரகப்பகுதிகளில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களில் படிக்கும் மாணவர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.10,000/- பயிற்சிக்கட்டணம் தொழிற்பயிற்சி நிலையங்களுக்கு அரசு சார்பில் வழங்கப்படும்.

## 19. முக்கிய அறிவுரைகள்:

- விண்ணப்பம் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்க வேண்டும்.
- முழுமையாக பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
- சேர்க்கை கோரும் மாவட்டத்தை தெரிவு செய்து விண்ணப்பத்தை இணையதளத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.
- விண்ணப்பம் சமர்ப்பிக்க கடைசி நாள். **31.05.2019** ஆகும்.
- மாவட்ட கலந்தாய்வுக்கு வருகை தரும்போது அசல் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படாவிடில் விண்ணப்பம் நிராகரிக்கப்படும்.
- தமிழ்நாடு மாணவர்களுக்கு மட்டுமே இட ஒதுக்கீடு பொருந்தும். பழங்குடி இன மாணவர்கள் வருவாய் கோட்டாட்சியரிடமிருந்து (Revenue Divisional Officer) சாதிச்சான்றிதழ் பெற வேண்டும்.
- பிற மாநிலங்களில் SSLC / பள்ளிப்படிப்பு முடித்தவர்கள் Migrate மற்றும் Equivalent சான்றிதழ்கள் சமர்ப்பித்து சேர்க்கை கோரலாம்.

## 20. SCVTதொழிற்பயிற்சி நிலையங்கள்:

SCVT அங்கீகரித்துள்ள தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் தொழிற்பிரிவுகளில் பயிலும் மாணவர்களுக்கு பயிற்சி முடிவில் தேர்வுகள் நடத்தப்பட்டு மாநில தொழிற்பயிற்சிக் குழுமத்தின் அரசு (SCVT) சான்றிதழ்கள் வழங்கப்படும். **மத்திய அரசு சான்றிதழ் (NCVT) தேவைப்படின்** SCVT முறையில் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் தன்விருப்ப அடிப்படையில் தனியராக (Private Candidates) NCVT தேர்வு எழுதி தேர்ச்சி பெறவேண்டும்.

## 21. மாவட்ட கலந்தாய்வு நடைபெறும் இடங்கள்:

| வ. எண் | மாவட்டத்தின் பெயர் | மாவட்ட கலந்தாய்வு நடைபெறும் இடம் | |
|---|---|---|---|
| 1 | சென்னை | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | கிண்டி |
| 2 | கோயம்புத்தூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | கோயம்புத்தூர் |
| 3 | தர்மபுரி | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | தர்மபுரி |
| 4 | திண்டுக்கல் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | திண்டுக்கல் |
| 5 | ஈரோடு | அரசு தொழிற் பயிற்சி நிலையம் | ஈரோடு |
| 6 | காஞ்சிபுரம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | செங்கல்பட்டு |
| 7 | கிருஷ்ணகிரி | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | ஒசூர் |
| 8 | மதுரை | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | மதுரை |
| 9 | நாமக்கல் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | நாமக்கல் |
| 10 | நீலகிரி | அரசு தொழிறபயிற்சி நிலையம் | குன்னூர் |
| 11 | புதுக்கோட்டை | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | புதுக்கோட்டை |
| 12 | இராமநாதபுரம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | பரமக்குடி |
| 13 | சேலம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | சேலம் |

| | | | |
|---|---|---|---|
| 14 | சிவகங்கை | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | சிவகங்கை |
| 15 | தேனி | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | தேனி |
| 16 | திருவள்ளுர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | அம்பத்தூர் |
| 17 | திருவண்ணாமலை | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | திருவண்ணாமலை |
| 18 | வேலூார் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | வேலூார் |
| 19 | திருப்பூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | திருப்பூர் |
| 20 | கடலூார் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | கடலூார் |
| 21 | விழுப்புரம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | உளுந்துார்பேட்டை |
| 22 | நாகப்பட்டினம் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | நாகப்பட்டினம் |
| 23 | அரியலூார் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | அரியலூார் |
| 24 | தஞ்சாவூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | தஞ்சாவூர் |
| 25 | திருச்சி | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | திருச்சி |
| 26 | கரூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | கரூர் |
| 27 | பெரம்பலூார் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | பெரம்பலூார் |
| 28 | திருவாரூர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | நீடாமங்கலம் |
| 29 | கன்னியாகுமரி | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | நாகர்கோவில் |
| 30 | திருநெல்வேலி | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | திருநெல்வேலி |
| 31 | தூாத்துக்குடி | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | தூாத்துக்குடி |
| 32 | விருதுநகர் | அரசு தொழிற்பயிற்சி நிலையம் | விருதுநகர் |

## 22. அடிப்படை பயிற்சி மையங்களில் (BTC) நடத்தப்படும் தொழிற் பிரிவுகள் :

அரசு மற்றும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களைப் போன்று, சில தொழிற்சாலைகளில் அடிப்படைப் பயிற்சி மையங்கள் (Basic Training Centre) என்ற பயிற்சி நிலையங்களை நடத்திட இத்துறையால் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இந்த அடிப்படை பயிற்சி மையங்களில், ஐ.டி.ஐ படிப்பிற்கான பாடங்களில் பயிற்சி வழங்கப்படுவதுடன், இறுதி வருடத்தில் தொழிற்சாலைகளில் உள்ள இயந்திரங்களில் நேரடிப்பயிற்சி பெறும் வகையல தொழிற்பழகுநர் பயிற்சிகளும் அளிக்கப்படும். பயிற்சி காலத்தில் ஒவ்வொரு மாதமும் ரூ.7000/— முதல் ரூ.9000/— வரை தொழிற்பிரிவுகளுக்கு ஏற்ப உதவித் தொகையும் வழங்கப்படும். பயிற்சியின் முடிவில் மத்திய அரசால்அகில இந்திய தொழிற்பழகுநர் தேர்வு நடத்தப்பட்டு நேரடியாக தொழிற்பழகுநர் சான்றிதழ் (National Apprenticeship Certificate) தேர்ச்சி பெற்றோருக்கு வழங்கப்படும். பயிற்சி பெறுபவர்களை சம்பந்தப்பட்ட தொழில் நிறுவனங்கள் தங்களது நிரந்தரப் பணிக்கு எடுத்துக் கொள்ளும் வாய்ப்பும் பிற துறைகளிலும் வேலைக்குச் செல்லும் தகுதியும் வாய்ப்பும் உள்ளது.

ஆணையர்
வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை